BreastScreen Victoria

# உங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

BreastScreen Victoria சேவைகளைப் பயன்படுத்தும்போது உங்களுக்கு இருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து இந்த ஆவணம் விவரிக்கிறது.

| | உங்களுக்குப் பின்வரும் உரிமைகள் உண்டு: | பின்வருவனவற்றிற்கு நீங்கள் பொறுப்பாகும்: |
|---|---|---|
| **அணுகல்** | • எந்த BreastScreen Victoria சிகிச்சையகத்திலும் கலந்து கொள்ளல்.<br>• இலவச மார்பகப் பர சோதனை மற்றும் மதிப்பீட்டுச் சேவைகள் பெறுதல். | • உங்களுக்கு ஏதேனும் சிறப்புத் தேவைகள் இருந்தால் எங்களுக்குத் தெரிவித்தல் |
| **பாதுகாப்பு** | • பாதுகாப்பான மற்றும் உயர்தர பராமரிப்பைப் பெறுதல்<br>• தகவலறிந்த விருப்பத் தேர்வுகளைச் செய்ய உதவும் தகவல்கள் | • ஊழியர்கள் மற்றும் பிற சேவை பயனர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு அல்லது உரிமைகளை எதிர்மறையாக பாதிக்காத வகையில் நடந்து கொள்ளுதல்.<br>• நீங்கள் ஊழியர்களையோ அல்லது பிற சேவை பயனர்களையோ அவமரியாதை செய்தால், அல்லது அச்சுறுத்தும் அல்லது ஆபத்தான முறையில் நடந்து கொண்டால், நிங்கள் வெளியேறக் கோரப்படலாம் அல்லது பராமரிப்பு திரும்பப் பெறப்படலாம் என்பதைப் புரிந்துகொள்வது. |
| **மரியாதை** | • மரியாதைக்குரிய மற்றும் கலாச்சார ரீதியாக பாதுகாப்பான அனுபவம்<br>• சுத்தமான, வசதியான மற்றும் தனிப்பட்ட சிகிச்சையகங்கள் | • உங்களையும் எங்கள் சேவையின் பிற பயனர்களையும் கவனித்துக் கொள்ளும் ஊழியர்களை மதித்தல்<br>• உங்கள் தேவைகளைப் பணிவான முறையில் எங்களுக்குத் தெரிவித்தல் |
| **தொடர்பாடல்** | • எங்கள் ஊழியர்களுடன் தெளிவான மற்றும் திறந்த தொடர்பாடல்<br>• கேள்விகள் கேட்டல்<br>• நீங்கள் புரிந்துகொள்ளக்கூடிய பயனுள்ள தகவல்கள்<br>• மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்தல் | • உங்களுக்கு உதவ, துல்லியமான தகவல்களை எங்களுக்கு வழங்குதல்<br>• உங்கள் பராமரிப்பு குறித்து ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால் எங்களுக்குத் தெரிவித்தல் |
| **பங்கேற்பு** | • எந்த நேரத்திலும் நிறுத்தச் சொல்லுதல்<br>• எந்த நேரத்திலும் உங்கள் ஒப்புதலைத் திரும்பப் பெறமுடிகின்றமை<br>• உங்களுடன் ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது ஆதரவு நபரை அழைத்து வாருதல் | • உங்கள் பராமரிப்புக்குத் தேவையான எந்தவொரு தகவலையும் எங்களுக்கு வழங்குதல் |
| **தனியுரிமை** | • உங்கள் தனியுரிமையை நாங்கள் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடிகின்றமை<br>• உங்கள் சொந்த சுகாதார தகவல்களை அணுக விண்ணப்பிக்க முடிகின்றமை<br><br>எங்கள் தனியுரிமைக் கொள்கையின் நகலைப் பெற எங்கள் ஊழியர்களிடம் கேளுங்கள் அல்லது பின்வரும் வலைத்தளத்தைப் பார்வையிடவும் breastscreen.org.au | • உங்கள் உடல்நலத் தகவல்கள் ஏதேனும் தவறாகவோ அல்லது முழுமையற்றதாகவோ இருந்தால் எங்களுக்குத் தெரிவித்தல் |
| **கருத்து** | • உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால் நாங்கள் பதிலளிப்போம் என்று எதிர்பாருங்கள்<br><br>ஒரு சிக்கல் தீர்க்கப்படாமல் இருந்தால், நீங்கள் சுகாதார முறையீடு ஆணையரைத் தொடர்பு கொள்ளலாம் | • உங்கள் பராமரிப்பு குறித்து ஏதேனும் கவலைகள் இருந்தால் அல்லது கருத்து தெரிவித்தல்<br><br>breastscreen.org.au இல் உங்கள் கருத்துக்களைச் சமர்ப்பிக்கவும் அல்லது 13 20 50 என்ற எண்ணை அழைக்கவும். |



மேலும் காண்க →

## எங்கள் திட்டம் மரியாதைக்குரியது மற்றும் அனைவரையும் வரவேற்பது

எங்கள் திட்டம் தகுதியுள்ள அனைத்து விக்டோரியர்களையும் உள்ளடக்கியதாகவும் அணுகக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். மார்பகப் சோதனைக்கான தடைகளை நிவர்த்தி செய்யவும், எங்கள் திட்டத்தில் பங்கேற்பை அதிகரிக்கவும் நாங்கள் சமூகத் திட்டங்களை நடத்துகிறோம்.

BreastScreen Victoria- வில் சமூக ஆதரவு பற்றிய கூடுதல் தகவலுக்கு, www.breastscreen.org.au/community-support/ ஐப் பார்வையிடவும்.

## மேலும் தகவல்

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால் எங்கள் ஊழியர்களிடம் கேளுங்கள். எங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் விக்டோரியாவில் உள்ள ஆஸ்திரேலிய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள் சாசனத்தை (Australian Charter of Healthcare Rights) அடிப்படையாகக் கொண்டவை.

# breastscreen.org.au இல் முன்பதிவு செய்யுங்கள் அல்லது 13 20 50 ஐ அழைக்கவும்.

உங்களுக்கு செவிப்புலன் அல்லது பேச்சு குறைபாடுகள் இருந்தால் **TTY 13 36 77**

மேலும் தகவலுக்கு அல்லது உங்கள் விவரங்களை மாற்ற, **breastscreen.org.au** ஐப் பார்வையிடவும் அல்லது **13 20 50** ஐ அழைக்கவும்.

மொழிபெயர்ப்பாளர் உதவிக்கு, **13 14 50** என்ற எண்ணை அழைக்கவும்.

மொழிபெயர்க்கப்பட்ட தகவல்:
**breastscreen.org.au/translations**

விக்டோரிய அரசாங்கத்தின் ஆதரவை BreastScreen Victoria பாராட்டுகிறது.



© 2023 BreastScreen Victoria. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

ஜூலை 2023 FSR&R/0723